# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2363/65 - 2023 දෙසැම්බර් මස 22 වැනි සිකුරාදා - 2023.12.22

*2363/65 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்தித் கருத்திட்டங்கள் சட்டம்**

*3 ஆம் பிரிவின் 2 ஆம் உட்பிரிவின் கீழான அறிவித்தல்*

*2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் 1 ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2 ஆம் உட்பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, முதலீட்டு மேம்பாட்டு விடயப்பொறுப்பு அமைச்சரான ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் விடயப்பொறுப்பு அமைச்சரின் ஆலோசனையின் பேரில் இந்த அறிவித்தல் மூலம் பின்வருமாறு பிரகடனம் செய்கின்றேன் :-*

*1. கொழும்பு துறைமுகத்தை தெற்காசிய பிராந்தியத்திற்கு தேவைகள் விநியோகங்கள் வழங்கும் கேந்திர நிலையமாக அபிவிருத்தி செய்யும் இலக்குடன், களஞ்சியங்களுக்கு மற்றும் களஞ்சியங்களிலிருந்து கப்பல் பண்டங்களை வினைத்திறனுடன் மற்றும் விளைதிறன்மிக்கவாறு விடுவிக்கும் ஆற்றலை ஏற்படுத்தல், உயர் தரத்தைக் கொண்ட சுங்க பிணைய களஞ்சிய வசதி செய்தல், பல்வேறு நாடுகளுக்கும் உரித்தான மீள் ஏற்றுமதி கொள்கலன்கள் (ஆஊஊ) அல்லது கொள்கலன் ஒன்றுக்கு போதியதாக இல்லாத கப்பல் பண்டங்கள் மூலம் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கப்பல் பண்டங்களுக்கு பெறுமதி சேர்ப்பதற்கு களஞ்சிய வசதிகளை செய்துகொடுத்தல், வெப்பநிலை கட்டுப்படுத்தப்பட்ட களஞ்சிய கிடங்கு வசதிகள் அல்லது களஞ்சிய வசதிகளை செய்துகொடுத்தல் இலங்கையில் வழங்கும் தேவைகள் விநியோகங்களின் செயலாற்றுகையை மேம்படுத்தல் என்பவை மூலம் பொருளாதார மற்றும் சமூக பயன்களை நாட்டுக்குப் பெற்றுக் கொடுக்கும் ஆற்றலைக் கொண்ட தேசிய நலனுக்காக கொழும்பு துறைமுகத்தில் தேவைகள் விநியோகங்கள் வழங்கும் நிலையமொன்றை தாபிக்கும் கருத்திட்டம், (இதனகத்து பின்னர் இந்த அறிவித்தலில் 'கருத்திட்டம்' என குறிப்பிடப்படுகின்றது) மேற்படி சட்டத்தின் பணிகளுக்காக செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமாக இனங்காணப்பட்டது.*


1A - PG 6578 — 291 (2023/12)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. இந்தக் கருத்திட்டம் இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் அரச தனியார் பங்குடைமை கருத்திட்டமொன்றாக விசேட பணிப் பிரிவொன்றின் கீழ் (இதனகத்து இந்த அறிவித்தலில் "SPV" என்றழைக்கப்படுகின்ற) ஐம்பது (50) வருட காலப்பகுதிக்கு அமுலில் இருக்கும் என்பதுடன், கருத்திட்டத்தை திட்டமிடல், நிர்மாணித்தல், நிதியங்களை ஈடுபடுத்தல், அபிவிருத்தி செய்தல், நடவடிக்கைகளை மேற்கொள்ளல், முகாமைத்துவம், பராமரிப்பு மற்றும் கொழும்பு துறைமுக தெற்காசிய தேவைகள் விநியோகங்கள் வழங்கும் நிலையத்திற்கு மாற்றுவது இதற்கு உரித்தானதாகும் என்று பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி விசேட பணிகள் பிரிவின் "SPV" பங்குரிமை பின்வருமாறாகும்.

(அ) வரையறுக்கப்பட்ட சைனா மர்சன்ட் போர்ட் ஹோல்டின்ஸ் கம்பனி (China Merchant Port Holdings Company Limited (CM Port) – 70%

(ஆ) இலங்கை துறைமுக அதிகாரசபை 15% மற்றும்

(இ) உள்நாட்டுக் கம்பனியொன்றான எக்ஸஸ் இன்ஜினியரின் பீஎல்சீ (Access Engineering PLC) 15%

3. இந்தக் கருத்திட்டம் சவுத் ஏசியா கொமர்சல் என்ட் லொஜிஸ்ரிக் (எஸ்ஏசீஎல்) ஹப் (South Asia Commercial and Logistics (SACL) Hub எனப் பெயரிடப்படுவதுடன் கருத்திட்டக் கம்பனி சவுத் ஏசியா கொமர்சல் என்ட் லொஜிஸ்டிக்ஸ் ஹப் லிமிடட் எனவும் (இதனகத்து பின்னர் இந்த அறிவித்தலில் கருத்திட்டக் கம்பனி என அறியப்படும்) பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

4. ஒட்டுமொத்த கருத்திட்டமும் 2 கட்டங்களின் கீழ் திட்டமிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ) முதல் கட்டம் 1-5 மாடிகள் வரையான களஞ்சியம் மற்றும் அலுவலக பிரதேசத்திற்கான கட்டிடமாகும்.

(ஆ) இரண்டாம் கட்டம் 6 – 8 மாடிகள் வரையான விநியோக மற்றும் சந்தை நிலையமாகும். கருத்திட்டத்தின் முதற் கட்டத்திற்காக ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன் இருநூற்று எண்பது (அமெ.டொ. 280,000,000/-) ஆன கருத்திட்ட செலவினம் இலங்கை முதலீட்டு சபையுடன் (இந்த அறிவித்தலில் இதன் பின்னர் "BOI" என்று குறிப்பிடப்படுகின்ற) உடன்படிக்கை செய்துகொள்ளும் திகதி முதல் ஆரம்பித்து நாற்பத்து இரண்டு (42) மாத காலப்பகுதிக்குள் ஈடுபடுத்தப்படும்.

5. கருத்திட்டத்தின் உத்தேச முதலீடான ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன் இருநூற்று எண்பது (அமெ.டொ. 280,000,000/-) ஆன தொகை 70 : 30 என்ற வகையில் கடன் உரித்து விகிதத்தின் அடிப்படையில் நிதியீட்டல் செய்துகொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

6. மேற்படி கருத்திட்டத்தின் பணிகளுக்கு, திருத்திய 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டச் சட்டத்தின் பிரகாரம் இந்த அறிவித்தலின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வரி விடுதலையளிப்புக்கு அமைச்சரவை மற்றும் இலங்கை முதலீட்டுச் சபை அங்கீகரிக்கப்படுகின்றவாறு கருத்திட்டக் கம்பனிக்கு ஏற்புடையதாதல் வேண்டும் என்று குறித்துரைக்கின்றேன்.

ரணில் விக்கிரமசிங்க,
முதலீட்டு மேம்பாட்டு அமைச்சர்.

முதலீட்டு மேம்பாட்டு அமைச்சு,
கொழும்பு,
2023, திசெம்பர் 19.

**அட்டவணை 1**

**1. 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டம்**

(i) கூட்டிணைக்கப்பட்ட வருமான வரி

மேற்படி கருத்திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட செயற்பாடுகளின் மூலம் உழைக்கப்படும் இலாபம் மற்றும் உழைப்புக்கள் மீதான கருத்திட்டக் கம்பனிக்கு வருமான வரி விதிப்பது தொடர்பாக, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ("வரி செலுத்துவதிலிருந்து விடுதலையளிப்புக் காலஎல்லை") பதினைந்து வருட (15) காலஎல்லைக்கு ஏற்புடையதாதலாகாது.

மேற்படி வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பு காலஎல்லை, கருத்திட்டக் கம்பனியினால் வரி அறவிடப்படக்கூடிய இலாபம் ஈட்டுகின்ற முதல் ஆண்டு தொடக்கம் அல்லது கருத்திட்டக் கம்பனியினால் தமது வணிக செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருட (02) காலப்பகுதியின் பின்னர் ஆகிய இரண்டு சந்தர்ப்பங்களில் முதலில் எய்தும் சந்தர்ப்பம் முதல் ஆரம்பமாதல் வேண்டும்.

(ii) பங்கிலாபம் மீதான வரி

வரி விலக்களிக்கப்பட்ட இலாபம் மற்றும் உழைப்பிலிருந்து பங்குரிமையாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்ற மற்றும் அவர்கள் பெற்றுக் கொள்ளும் பங்கிலாபம், மேற்படி பதினைந்து வருட (15) வரி செலுத்துவதிலிருந்து விடுதலையளிப்புக் காலஎல்லைக்குள் மற்றும் அதன் பின்னர் ஒரு (01) வருட காலப்பகுதிக்கு வருமான வரி செலுத்துவதிலிருந்து விடுதலையளிக்கப்படும்.

(iii) தடுத்துவைத்தல் வரி

ஒட்டுமொத்த கருத்திட்டக் காலப்பகுதி முழுவதற்கும் கருத்திட்டக் கம்பனி தடுத்துவைத்தல் வரியிலிருந்து விலக்களிக்கப்படல் வேண்டும்.

(iv) தனிப்பட்ட வருமான வரி

கூடியபட்சமாக முப்பது (30) வெளிநாட்டவர்கள் எனும் எண்ணிக்கைக்கு உட்பட்டு ஐந்து (5) ஆண்டு காலப்பகுதிக்கு மேற்படி கருத்திட்டம் தொடர்பாக தொழிலில் ஈடுபடுவதன் மூலம் கிடைக்கும் உழைப்புக்கள் மற்றும் இலாபங்களிலிருந்து எழுகின்ற வருமான விரியிலிருந்து பதினைந்து வருடம் (15) வரி செலுத்துவதிலிருந்து வெளிநாடுகளைச் சேர்ந்த சேவைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் விடுதலையளிக்கப்படுவார்கள்.

**2. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர்பெறுமதி மீதான வரி (VAT வரிச் சட்டம்)**

முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டவாறு, கருத்திட்டங்களை அமுல்படுத்தத் தேவையான, கருத்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட சகல இறக்குமதிப் பண்டங்கள், முதலீட்டு சபை உடன்படிக்கை செய்துகொள்ளும் திகதி முதல் ஆரம்பித்து கருத்திட்ட நடைமுறைப்படுத்தற் காலப்பகுதியான நாற்பத்து இரண்டு (42) மாத காலப்பகுதியில் சேர்பெறுமதி வரி (VAT வரி) செலுத்துவதிலிருந்து விடுதலையளிக்கப்படும்.

**3. 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி வரிச் சட்டம்**

முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்படவாறான, கருத்திட்டங்களை அமுல்படுத்தத் தேவையான, கருத்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட சகல இறக்குமதிப் பண்டங்களுக்கும், முதலீட்டு சபையுடன் உடன்படிக்கை செய்துகொள்ளும் திகதி முதல் ஆரம்பித்து கருத்திட்ட நடைமுறைப்படுத்தற் காலப்பகுதியான நாற்பத்து இரண்டு (42) மாத காலப்பகுதியில் துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி வரி (PAL) செலுத்துவதிலிருந்து விடுதலையளிக்கப்படும்.

**4. 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்**

முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டவாறான, கருத்திட்டங்களை அமுல்படுத்தத் தேவையான, கருத்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட சகல இறக்குமதிப் பண்டங்களுக்கும், முதலீட்டு சபை உடன்படிக்கை செய்துகொள்ளும் திகதி முதல் ஆரம்பித்து கருத்திட்ட நடைமுறைப்படுத்தற் காலப்பகுதியான நாற்பத்து இரண்டு (42) மாத காலப்பகுதியில் செஸ் வரி (CESS) செலுத்துவதிலிருந்து விடுதலையளிக்கப்படும்.

**5. (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டம்**

முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டவாறான, கருத்திட்டங்களை அமுல்படுத்தத் தேவையான, கருத்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட சகல இறக்குமதிப் பண்டங்கள் (நிதி அமைச்சினால் பிரகடனம் செய்யப்பட்ட ஏற்பெதிர் பொருட் பட்டியலில் (Negative List) குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தவிர) முதலீட்டு சபையுடன் உடன்படிக்கை செய்துகொள்ளும் திகதி முதல் ஆரம்பித்து கருத்திட்ட நடைமுறைப்படுத்தற் காலப்பகுதியான நாற்பத்து இரண்டு (42) மாத காலப்பகுதியில் சுங்க இறக்குமதித் தீர்வை (CID) செலுத்துவதிலிருந்து விடுதலையளிக்கப்படும்.

அவ்வாறாயினும், ஏற்பெதிர் பொருட் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் இலங்கையில் முழுமையாக உற்பத்தி /தயாரிப்பு செய்யப்படுவதில்லை எனின் அல்லது மேற்படி அம்சங்கள் போதியளவிலான தரம், அளவுகள் மற்றும் கருத்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு வழங்கப்பட்டுள்ள கால எல்லைக்குள் பெற்றுக் கொள்ள முடியாதுள்ள சந்தர்ப்பத்தில், மேற்படி ஏற்பெதிர்ப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை இறக்குமதி செய்வது தொடர்பாக முதலீட்டுச் சபையினால் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்.

EOG *12-0324*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.